# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

எண். 34 /123 துகார் டவர்ஸ், 6வது தளம், மார்ஷல்ஸ் சாலை, எழும்பூர், சென்னை 600 008.
தொலைபேசி எண். 044–2822 1233, தொலைநகல். 044 – 2825 3021

---

**உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் (LCO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு (PLC) முக்கிய அறிவிப்பு**

**பார்வை. 22.07.2015 அன்று நடைபெற்ற 45–வது இயக்குநர் குழு கூட்டத்தின் 28–வது தீர்மானம்.**

குறைந்த கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை மாதம் ரூ. 70/– என்ற கட்டணத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது.

மாதாந்திர கட்டணம் மற்றும் நிலுவைத்தொகை பாக்கி வைத்துள்ள உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் (LCO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களுக்கு (PLC), அபராதத்தொகை (Penalty) விதிப்பதில் மாற்றம் செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் இயக்குநர் குழு பின்வருமாறு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு செய்துள்ள உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் (LCO) மற்றும் தனியார் உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்கள் (PLC), அந்தந்த மாதத்திற்குரிய கட்டணத் தொகையினை அடுத்த மாதத்தின் 20–ம் தேதிக்குள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், அந்தந்த மாதத்திற்கான நிலுவைத் தொகையின் பேரில் மாதம் ஒன்றுக்கு, ஒன்றரை சதவீதம் (1.5 %) என்ற அடிப்படையில் நிலுவையிலுள்ள நாட்களுக்கு கணக்கிட்டு அபராதத்தொகை வசூல் செய்யப்படும். உதாரணமாக 2015 ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்கான கட்டணத் தொகையினை 2015 செப்டம்பர் மாதம் 20ம் தேதிக்குள் அபராதமின்றி செலுத்தலாம். அவ்வாறு செலுத்தாத நபர்களுக்கு, 21.09.2015 முதல் நிலுவையில் உள்ள தொகைக்கு, மாதம் ஒன்றுக்கு 1.5 % என்ற அடிப்படையில் நிலுவையில் உள்ள நாட்களுக்கு கணக்கிட்டு அபராதத் தொகை வசூல் செய்யப்படும்.

எனவே, அனைவரும் மாதாந்திர கட்டணத்தொகையினை மேலே குறித்த கால வரையறைக்குள் தவறாது செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மேலாண்மை இயக்குநர்**